தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 5/- மலர் 12 இதழ் 10 பிப்ரவரி 2011 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல்

விற்பனைக் கண்காட்சி

“ கிராமப்புற ஏழை எளிய மகளிர் கந்துவட்டிக்காரர்களின் பிடியில் சிக்கி அல்லல்படும் அவல நிலையினை மாற்றிடவும், வங்கிகள் மூலம் மிகக் குறைந்த வட்டியில் கடன் பெறவும் ஏதுவாக திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ”

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

ஏழை எளிய மகளிர் வாழ்வில் முன்னேற்றம் அடைந்திடவும், பொருளாதார ரீதியாக சுய சார்பு பெற்றிடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1989ஆம் ஆண்டில் துவக்கி வைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த வளர்ச்சிக்கு உரமூட்டும் விதமாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தீட்டும் பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்திலும், அண்ணா நகர் மேற்கில் அமைந்துள்ள தந்தை பெரியார் சமூகக் கூடத்திலும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கிராமப்புற ஏழை எளிய மகளிர் கந்துவட்டிக்காரர்களின் பிடியில் சிக்கி அல்லல்படும் அவல நிலையினை மாற்றிடவும், வங்கிகள் மூலம் மிகக் குறைந்த வட்டியில் கடன் பெறவும் ஏதுவாக திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் அனைத்துப் பகுதியிலும் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் அளித்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் ஏழ்மையினை ஒழிக்கவும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களை மேலும் ஊக்கப்படுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு 2006–07ஆம் ஆண்டு மணிமேகலை விருதினை உருவாக்கி, ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாநில அளவில் சிறப்பாக செயல்பட்டுவரும் ஐந்து கூட்டமைப்புகள் மற்றும் 10 சுய உதவிக் குழுக்களுக்கு 2009–10ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதினை சமீபத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

எனவே மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேலும் சிறப்பாக செயலாற்றி சாதனைகள் பல படைக்க வேண்டும் என இப்புத்தாண்டு மற்றும் பொங்கல் நன்னாளில் வாழ்த்துகிறேன்.

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

22

மாதங்களும் தாக்கும் நோய்களும்

வலி இருக்கும் காலத்தில் மார்பு எலும்புக் கூட்டுக்கு பின்னால் எரிவது போன்ற உணர்ச்சியும் உடன் ஏற்படும். இதையே நெஞ்செரிச்சல் என்கிறோம்.

24

வளர்க வணிகம்

இணைவோம், உழைப்போம், வளர்வோம்
முனைவோம், முயல்வோம், உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின்

மணிமேகலை விருது பெற்ற சாபர் மதி மகளிர் சுய உதவிக் குழு » 5

இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் உறுப்பினர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி போன்றவைகள் அளிக்கப்பட்டது.

குடும்பப் பெண்களுக்கான இலவச சட்ட உதவி மையம் » 13

குடும்ப வன்கொடுமையால் பாதிக்கப்படும், பெண்களுக்கான இலவச சட்ட உதவி மையம் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் துவங்கப்பட்டுள்ளது.

வெற்றியை நோக்கி ஒரு பயணம் » 16

50 வயதினை எட்டி, வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமலிருக்கும் ஏழை உழைக்கும் திறனற்ற பெண்களுக்கான

ஓய்வூதியத் திட்டம்

26

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 10 பிப்ரவரி 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

அன்புள்ள வாசகர்களுக்கு,

வளர்ச்சிக்கான தூய சிந்தனை

2011ஆம் ஆண்டு அனைவருக்கும் நம்பிக்கையும், உற்சாகத்தையும் ஊட்டும் ஆண்டாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றோம். சென்ற ஆண்டில் பல சாதனைகளையும், சோதனைகளையும் சந்தித்திருப்போம். செய்த சாதனைகளை எண்ணி மகிழ்ச்சியடைவோம். சந்தித்த சோதனைகளைக் கண்டு துவளாமல் அவற்றை சாதனைகளாக மாற்ற முயற்சிப்போம்.

ஒவ்வொரு நாளும் சூரியன் மறைந்து மறுநாள் புதிய விடியலைக் காண்பதைப் போல ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் போதும் புதுப்பொலிவுடன் விழித்தெழுந்து புத்துணர்வுடன் செயல்பட துவங்குவோம்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழர்களுக்கென்று வரும் திருநாள் பொங்கல் திருநாள். உலகெங்கும் உள்ள தமிழர்கள் சாதி, மத, பேதமின்றி தமிழர் என்ற உணர்வோடு கொண்டாடும் ஒரே திருநாள் பொங்கல் திருநாள்.

தைத்திங்கள் பிறப்பதற்கு முந்தைய நாள் உபயோகமற்ற பொருட்களையும், தீய சிந்தனைகளையும் நாம் எரித்து, அழித்தொழிப்பதுதான் போகிப் பண்டிகை. தைத்திங்களாம் தமிழ் வருடப் பிறப்பில் புத்தரிசி பொங்கலிட்டு புத்தாடை அணிந்து கொண்டாடுவது போல் நாம் புத்தாண்டில் சமுதாய வளர்ச்சிக்கான தூய சிந்தனையோடு அடியெடுத்து வைக்க வேண்டும்.

இந்திய நாடு மிகப் பெரிய ஒரு ஜனநாயக நாடாகும். ஜனநாயகம் என்பது ஒரு தத்துவம். அதாவது மக்களே மக்களுக்காக மக்களால் ஆட்சி செய்வது. குடியரசு என்பது ஜனநாயக தத்துவத்தை செயல்படுத்தும் நடைமுறை ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ஆம் தேதியை குடியரசு தின விழாவாக கொண்டாடுகிறோம். பாமர மக்கள் முதல் படிப்பாளிகள் வரை ஒவ்வொரு குடிமக்களும் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துவதுதான் குடியரசு தினம் இந்திய அரசியல் சட்டத்தை ஒவ்வொருவரும் உணர்ந்தவர்களாக உள்ளோமா? என்றால் கேள்விக்குறியாகவே உள்ளது.

நமக்காக உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்ட வரைவின்படி நடப்பதுதான் நாட்டுப்பற்று. இந்த சிந்தனையோடு நம் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு பாடுபட இந்திய குடிமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் இந்த புதிய வருடத்தின் இந்நந்நாளில் உறுதியேற்போமாக.

மீண்டும் வாசகர்கள் அனைவருக்கும் முற்றம் இதழ் தனது தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றது.

வாழ்க தமிழ்!.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

மிக்க மகிழ்ச்சி!

ஏழை எளியோருக்கு சேவை செய்து, இறவாப் புகழ் பெற்ற அன்னை தெரசா அவர்களின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் திறப்பு விழா குறித்த செய்திகளையும், வண்ணப் படங்களையும் முற்றம் இதழ் வாயிலாக அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். விழாவினை நேரில் காண்பது போன்று இருந்தது அந்தக் கட்டுரை.

இப்படிக்கு,
திருமதி. மீனாட்சி ராமச்சந்திரன்,
அல்லி மகளிர் சுய உதவிக் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

வருக! வருக!

அறியாமையில் மூழ்கிக் கிடந்த மகளிர் வாழ்வில் ஒளி விளக்கேற்றிடும் வண்ணம் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் குறித்த செய்திகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றத்திற்கு எங்களது நன்றி.

திருமதி. விஜயலட்சுமி கார்த்திக்
மங்களம் மகளிர் சுய உதவிக் குழு,
திருத்தவெளி கிராமம், காஞ்சிபுரம்.



www.tamilnaduwomen.org/murtram

புத்தாண்டு வாழ்த்துகள்!

தடைகளைத் தகர்த்து வெற்றி பல பெற்று வரும் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு செய்திகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழுக்கு எங்களின் சுய உதவிக் குழுவின் சார்பில் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்,
அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழு,
பெரிய சோரகை கிராமம்,
சேலம் மாவட்டம்.

வாழ்த்துகள்!

மகளிர் வாழ்வில் ஏற்றம் பெற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம் பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளையும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளையும், அரிய பல செய்திகளையும் தாங்கி வரும் முற்றம் இதழ் மேலும் வளர வாழ்த்துகிறோம்.

செல்வி கமலம் - ஹேமலதா
பாரதியார் சுய உதவிக் குழு,
குத்தனூர், காஞ்சிபுரம்

“மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி.”

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com ■ wdcmutram@gmail.com

மணிமேகலை விருது பெற்ற

சாபர் மதி மகளிர் சுய உதவிக் குழு

கன்னியாகுமரி மாவட்டம், மறக்குடி தெருவில் 2001ஆம் ஆண்டு, வாழ்வில் முன்னேற்றம் அடைந்தே தீருவது என்ற கனவோடு இருந்த இருபது பெண்களால் உருவாக்கப்பட்டது சாபர் மதி மகளிர் சுய உதவிக் குழு. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் உறுப்பினர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி போன்றவைகள் அளிக்கப்பட்டது.

'ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்கு காரணம் என்பது அனுபவத்தின் படிப்பினை' என்ற கூற்றுக்கு இணங்க, இக்குழு உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மற்றும் ஸ்டெல்லா மாரீஸ் தொண்டு நிறுவனமும் இணைந்து வழங்கிய தையல் பயிற்சி, உல்லன் நூலில் மிதியடி, பொம்மை தயாரித்தல், இருசக்கர வாகனம் ஓட்டுநர் பயிற்சி மற்றும் இக்காலத்திற்கு தேவையான கணினிப் பயிற்சி போன்ற பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி, சேமித்து வருவதுடன், வங்கியில் நேரடிக் கடன் பெற்று மளிகைக் கடை, மாவு அரவை மில், தையல் நிலையம், மிதியடி மற்றும் பொம்மை தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவாய் பெறுகின்றனர். வங்கியில் பெற்ற கடன் தொகையை முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

உறுப்பினர்கள் குழு நிர்வாகத்தை முறையாக நடத்துவதுடன், குடும்ப நிர்வாகத்தையும் செயல்படுத்த உள்கடன் பெற்று தனியாகத் தொழில் செய்வதுடன், அதில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பங்கினை குழுவிற்கும் செலுத்தி வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள ஒத்தப்புளி எனும் ஊரில் செயல்பட்டு வரும் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஆடைகள், பாடப் புத்தகங்கள் மற்றும் உணவு போன்ற உதவிகளை ஆண்டுதோறும் வழங்கி வருகின்றனர். மேலும் ஆதரவற்ற சிறுவன் ஒருவனின் படிப்பிற்கு உதவிடும் வண்ணம் அச்சிறுவனின் பெயரில் தபால் நிலையத்தில் மாதந்தோறும் ரூ. 100/– சேமித்து வருகின்றனர்.

தங்கள் குழுவினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வரும் சாபர் மதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் சமீபத்தில் அக்குழுவிற்கு மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் மணிமேகலை விருது வழங்கப்பட்டது இக்குழுவின் வெற்றிப் பயணத்தில் ஒரு மைல் கல் எனலாம். ■

தைலங்கள் மற்றும் தேயிலை விற்பனையில்

அன்னை இந்திரா மகளிர் குழுக் கூட்டமைப்பு

அன்னை இந்திரா மகளிர் குழு கூட்டமைப்பு, நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா பகுதியில் 1996ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இக்கூட்டமைப்பில் இப்பகுதியில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக சேர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு மகளிர் திட்டத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கூட்டமைப்பின் சார்பில் வங்கியில் கடன் பெற்று, அத்தொகையினை உறுப்பினர் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டு வருகிறது. கடன் பெற்றக் குழுக்கள் தரமான மூலிகைத் தாவர நாற்றுகளை உற்பத்தி செய்து, அதைக் கூட்டமைப்பின் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். இத்தொழிலில் 80 குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன.

வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருவதுடன், வெளிமாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் பங்கு பெற்று வருகின்றனர்.

புதிய மகளிர் குழுக்களை உருவாக்குதல், உடல் நலத்தை பேணிக்காத்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கழிப்பறை அமைத்தல், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மாணவ – மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், கல்வி கற்க தேவையான உபகரணங்கள் வாங்கிக் கொடுத்தல், உதவித் தொகை பெற்றுத் தருதல் போன்றவற்றிலும் இக்குழுவினர் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தி வரும் மகளிர் திட்டத்திற்கும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும் மனதார நன்றி கூறுகின்றனர் அன்னை இந்திரா மகளிர் குழுக் கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள். ■

இக்கூட்டமைப்பினர் உற்பத்தி செய்யும் மூலிகை நாற்றுகள் உலகப் பிரசித்தி பெற்றவையாகத் திகழ்கின்றன. தரமான இந்த நாற்றுகளை உற்பத்தி செய்யும் குழுக்களை அனைவரும் பாராட்டி வருகின்றனர். மேலும் மூலிகைத் தைலம், தேயிலை போன்றவற்றையும் இக்கூட்டமைப்பினர் விற்பனை செய்து வருகின்றனர்.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் விற்பனைக் கண்காட்சி 2011

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று மாபெரும் இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, தொழிற்திறன் பயிற்சி போன்றவை வழங்குவதன் மூலம் வறுமையில் வாழும் ஏழை மகளிர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 4,88,970 சுய உதவிக் குழுக்களில் சுமார் 75,66,497 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, தொழிற்திறன் பயிற்சி போன்றவை வழங்குவதன் மூலம் வறுமையில் வாழும் ஏழை மகளிர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மகளிர்சுயஉதவிக்குழுக்களின்வளர்ச்சிக்காகவும்,அவைகள்சிறந்தமுறையில் செயல்படவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., ஆகியோரின் வழிகாட்டுதலின்படி சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாக மேம்பாடு பெற்றிட

அவர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பயிற்சிக்குப் பின்னர் சுய தொழில் தொடங்க கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை மேம்படுத்தவும், மக்களிடையே இப்பொருட்களை பிரபலப்படுத்தவும், ஆண்டுதோறும் மாநில மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தேசிய அளவில் பல்வேறு மாநில தலைநகரங்களில் நடைபெறும் விற்பனை கண்காட்சிகளிலும் இக்குழுக்கள் பங்கேற்கின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட அளவில் 29 வளாகங்கள், 22 கூடுதல் வணிக வளாகங்கள் மற்றும் 256 கிராம அங்காடி வளாகங்களும் கட்டப்பட்டு இப்பொருட்கள் நிரந்தரமாக விற்பனை செய்யப்படுகின்றன. சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நிரந்தரமாக விற்பனை செய்வதற்கு ஏதுவாக சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ. 15.33 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 1.11.2010 அன்று திறந்து வைத்தார்கள்.

மாநில அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொழில் திறன், உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவர் தம் ஆற்றலை வெளியுலகிற்கு உணர்த்திடவும், சுய உதவிக் குழுக்களின் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி, நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும், இந்த விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அன்னை தெரசா மகளிர் வளாகத்திலும், அண்ணா நகர் மேற்கில் உள்ள தந்தை பெரியார் சமூகக் கூடத்திலும் நடைபெறும் 2010–2011ஆம் ஆண்டிற்கான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் விற்பனைக் கண்காட்சியை, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 20.12.2010 அன்று திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

> **மாநில அளவிலான** மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் முதன்

மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் செயல்முறை விளக்கமும், குழந்தைகளை மகிழ்விக்கும் வண்ணம் விளையாட்டு அரங்கமும், சுவையான உணவு வகைகள் கொண்ட உணவகமும் அமைக்கப்பட்டிருந்தன.

முதலாக நடைபெற்ற இந்த விற்பனைக் கண்காட்சியில் 38 அரங்குகளும், தந்தைப் பெரியார் சமூகக் கூடத்தில் நடைபெறும் கண்காட்சியில் 34 அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த விற்பனைக் கண்காட்சிகளில் மகளிர் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் மற்றும் நபார்டு வங்கி மூலமாக பயன்பெறும் 32 மாவட்டங்களைச் சார்ந்த 350 மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை செய்யப்பட்டன.

இந்த விற்பனைக் கண்காட்சியில் பல்வேறு வகையான கடல் சார்ந்த பொருட்கள், கைவினைப் பொருட்கள், சணல், பனை ஓலை, பாக்கு மட்டையிலான பொருட்கள், காகிதப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், தேன், மலைவாழ் மகளிர் தயாரித்த கம்பளி ஆடைகள், கைத்தறி மற்றும் பட்டுப் புடவைகள், மரம் மற்றும் உலோக சிற்பங்கள், வீட்டில் அன்றாடம் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

மேலும் இக்கண்காட்சியில் நேரடியாக மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் செயல்முறை விளக்கமும், குழந்தைகளை மகிழ்விக்கும் வண்ணம் விளையாட்டு அரங்கமும், சுவையான உணவு வகைகள் கொண்ட உணவகமும் அமைக்கப்பட்டிருந்தன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு 2010–11ஆம் ஆண்டிற்கு விற்பனைக் கண்காட்சி கால அட்டவணை மாவட்ட அளவில் தயார் செய்யப்பட்டு மாவட்ட அளவில் 62 கட்டாய விற்பனைக் கண்காட்சிகளும், வட்டார அளவில்

■ கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் மரத்தினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

134 விருப்பக் கண்காட்சிகளும், 2010–11ஆம் ஆண்டில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு விற்பனைக் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் இதுவரை மாநில அளவில் நடைபெற்றுள்ள கண்காட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்களின் உற்பத்திப் பொருட்களை 1.86 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளனர்.

இக்கண்காட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பல்வேறு வகையான தரமான பொருட்கள் குறைந்த விலையில் ஒரே இடத்தில் கிடைத்ததால் ஏராளமானவர்கள் வருகை தந்து பொருட்களை வாங்கிச் சென்றனர்.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 20.12.2010 முதல் 31.01.2011 வரையிலும், தந்தை பெரியார் சமூகக் கூடத்தில் 20.12.2010 முதல் 18.01.2011 வரையிலும் இக்கண்காட்சிகள் நடைபெற்றன.

மாநில அளவில் நடைபெற்றுள்ள கண்காட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்களின் உற்பத்திப் பொருட்களை 1.86 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளனர்.

2009-10ஆம் ஆண்டிற்கான

மணிமேகலை விருது

மகளிர் வாழ்வில் ஒளியேற்றிடவும், அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்திடவும், 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட சுய உதவிக் குழு படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றியினைத் தொடர்ந்து அவற்றில் நிலைத்தத் தன்மையினை கொண்டு வரும் வகையில் ஒரே ஊராட்சிப் பகுதியில் உள்ள குழுக்களை இணைத்து கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இக்கூட்டமைப்புகள் இவ்வியக்கத்தினை தலைமை தாங்கி நடத்திச் செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களை அடையாளம் கண்டு, அவைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மணிமேகலை விருதினை 2006–07ஆம் ஆண்டு நிறுவியது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 10 சுய உதவிக் குழுக்களுக்கு 2009–10ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுகளை 31.12.2010 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறையில் நடைபெற்ற மணிமேகலை விருது வழங்கும் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறந்த கூட்டமைப்புகள்

நாகப்பட்டினம் மாவட்டம் – செட்டிப்புலம் கூட்டமைப்பு
தேனி மாவட்டம் – வடபுதுப்பட்டி கூட்டமைப்பு,
கன்னியாகுமரி மாவட்டம் – சுவாமித்தோப்பு கூட்டமைப்பு,
புதுக்கோட்டை மாவட்டம் – வேலூர் மாவட்டம்,
திருநெல்வேலி மாவட்டம் – பெரியபிள்ளைவலசை கூட்டமைப்பு

31.12.2010 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

சிறந்த குழுக்கள்

மதுரை மாவட்டம் – நிலா மகளிர் சங்கம்
கன்னியாகுமரி மாவட்டம் – சாபர்மதி சுய உதவிக் குழு
நாமக்கல் மாவட்டம் – ஒளி சுய உதவிக் குழு
சிவகங்கை மாவட்டம் – ஸ்ரீ விநாயகா சுய உதவிக் குழு
கிருஷ்ணகிரி மாவட்டம் – கண்ணாத்தாள் மகளிர் சங்கம்
திருவள்ளூர் மாவட்டம் – ஐயப்ப நகர் எண் 1 சுய உதவிக் குழு
பெரம்பலூர் மாவட்டம் – மாரியம்மன் சுய உதவிக் குழு
புதுக்கோட்டை மாவட்டம் – தீபம் சுய உதவிக் குழு
திருநெல்வேலி மாவட்டம் – ஜெனியா சுய உதவிக் குழு
தூத்துக்குடி மாவட்டம் – தென்னம்பூ சுய உதவிக் குழு

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு திறன் பயிற்சி அளிக்க ரூபாய் 50 கோடி! மாவட்ட வாரியாக வேலைவாய்ப்பு முகாம்!!

தனியார் நிறுவனங்களில் எண்ணற்ற வேலைவாய்ப்புகள் இருக்கும் போதும், வேலையில்லா திண்டாட்டம் இன்றும் அரசுக்கு பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. தனியார் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் அனைத்து திறன்களையும், இளைஞர்களிடம் வளர்க்கும் வகையில் தமிழக அரசு, 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திறன் பயிற்சித் திட்டத்தை' நடைமுறைப்படுத்த உள்ளது.

கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி, இத்திட்டத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். துணை முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள, 'தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் குழுமம்' மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குனர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது

தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற இன்று, பாட அறிவுடன் கம்யூனிகேஷன், கம்ப்யூட்டர் அறிவு உள்ளிட்ட திறன்களும் அவசியம் ஆகிறது. இத்திறன்களை வளர்க்கும் வகையில், இந்தியாவில் முதல் முறையாக, 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு திறன் பயிற்சித் திட்டம்' கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திறன் பயிற்சி அளிக்க ஒருவருக்கு 6,000 ரூபாய் வரை செலவிடப்படும். முதல் கட்டமாக ஒரு லட்சம் பேருக்கு பயிற்சி தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு முகாம்கள் நடக்கும்போதே, திறன் பயிற்சியில் பங்கேற்க உள்ள இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சம். குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு கல்வித் தகுதி, வயது வரம்பு 35க்குள் உள்ள வேலையில்லா இளைஞர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

குடும்பப் பெண்களுக்கான இலவச சட்ட உதவி மையம் இந்தியாவில் முதன்முறையாக சென்னையில் திறப்பு

குடும்ப வன்கொடுமையால் பாதிக்கப்படும், பெண்களுக்கான இலவச சட்ட உதவி மையம் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் பெண் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தினை தேசிய சட்டப்பணிகள் ஆலோசனைக் குழுத் தலைவரும், உச்சநீதிமன்ற நீதிபதியுமான திரு. அல்டாமாஸ் கபீர் அவர்கள் திறந்து வைத்து பேசும்போது,

'வீட்டில் தாயும், மனைவியும் குடும்ப உறுப்பினர்களுக்காக உழைக்கின்றனர். ஆனால், வீட்டிலிருந்து வெளியே வரும்போதும், இரவு வீட்டிற்கு வந்த பிறகு தான் அவர்களை நினைத்துப் பார்க்கின்றனர். ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், முதல்வர், அரசியல் தலைவர் என பெண்கள் தங்கள் திறமைகளை நிரூபிக்கின்றனர். ஆண்களால் எல்லா நேரத்திலும் தனியாக ஜெயிக்க முடியாது.

குடும்ப உறுப்பினர்களால் பாதிக்கப்படும் பெண்களுக்காக, குடும்ப வன்கொடுமை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதில் காலத்திற்கேற்ற வகையிலான போதுமான சட்டப் பிரிவுகள் உள்ளன. அவற்றை சரியான முறையில் எடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை உணர்ந்து நீதித்துறையினர், வழக்கறிஞர்கள் சேவையாற்ற வேண்டும்.

பெரும்பாலும் கணவன், மனைவி பிரச்சினைகளைத் தீர்க்க இரண்டு அறைகளைப் பயன்படுத்தாமல், ஒரே அறையில் குழந்தைகளையும் சேர்த்து வைத்து, அவர்களைப் பேச விடுங்கள்' இவ்வாறு உச்சநீதிமன்ற நீதிபதி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

காஞ்சிபுரம்

மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி

காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, 1500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ. 9 கோடியும், 500 குழுக்களுக்கு நேரடிக் கடனாக ரூ. 7.01 கோடியும் மற்றும் 50 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 50 இலட்சம் ஊக்கத் தொகையினையும் வழங்கினார்கள். இவ்விழாவில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வெள்ளக்கோயில் திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழா ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின்படி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. ஹனிஷ் சாப்ரா, இ.ஆ.ப., அவர்களும், மகளிர் திட்ட அலுவலர் திரு. ஏ. வி. ஞானசேகரன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். ■

முன்னதாக மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டு அப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார்.

திருச்சிராப்பள்ளி

சுழல் நிதி வழங்கும் விழா

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் ■

காஞ்சிபுரம்

சமத்துவப் பொங்கல் விழா

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆண்டுதோறும் பொங்கல் திருநாளை பொதுமக்களுடன் சேர்ந்து சமத்துவப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடுவேன் என்று கூறி இருந்தார். அதன்படி ஆண்டுதோறும் பொதுமக்களுடன் சமத்துவப் பொங்கலை கொண்டாடி வருகிறார். இவ்வாண்டு ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், மேவளூர் குப்பம் கிராமத்தில் பொங்கல் திருநாளையொட்டி நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் தமது குடும்பத்தாருடன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. த. துரைசாமி, ஸ்ரீபெரும் புதூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி. வனமயில் மாணிக்கம், மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், மகளிர் குழுக் கூட்டமைப்புகளை சேர்ந்தவர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

நாமக்கல்

சுழல் நிதி

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, பிலிப்பாக்குட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்தார்.

மேலும் இவ்விழாவில், பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்தும், ஏழை எளியோருக்கு நலத் திட்ட உதவிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி, பெருங்கடன் ஆகியவற்றை வழங்கியும் விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திரு. செ. காந்தி செல்வன், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. வி.பி. துரைசாமி, மாவட்ட ஆட்சியர் திருமதி. சோ, மதுமதி, இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே.பி. இராம லிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. பொன்னுசாமி, திரு. கே. இராமசுவாமி, டாக்டர் கே. நெடுஞ்செழியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள், வங்கிகளின் அதிகாரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், மகளிர் குழுக் கூட்டமைப்புகளை சேர்ந்தவர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மாவட்டச் செய்திகள்

கோவை கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குப் பாராட்டு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் கோவை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்கு வருகை தந்தார். ஆய்வுக்குப் பின்னர் பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அசோகபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வருகை புரிந்தார்.

இந்தக் கூட்டமைப்பில் இணைந்துள்ள 45 குழுக்களும் சுழல் நிதி பெற்றுள்ளன. 11 குழுக்கள் பொருளாதாரக் கடன் பெற்று குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான ஆயத்த ஆடைகள், பூங்கொத்து, ஹாலோ பிளாக் செங்கல் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றன.

மேலாண்மை இயக்குநர் அவர்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், கூட்டமைப்பின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களிடம் கலந்துரையாடினார். கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், கூட்ட நடவடிக்கைகள், குழுக்கள் மேற்கொண்டுள்ள தொழில்கள், சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் பெற்றது குறித்த விபரங்கள் ஆகியவற்றை கேட்டறிந்தார்.

இந்தக் கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்கள் தாங்கள் வாங்கிய கடனை 100 விழுக்காடு முறையாகத் திருப்பி செலுத்தி வருவதை அறிந்து குழு உறுப்பினர்களைப் பாராட்டினார். இந்த ஊராட்சிப் பகுதியில் இதுவரை சுய உதவிக் குழுக்களில் இணையாத ஏழை மகளிரைக் கண்டறிந்து, அவர்கள் சுய உதவிக் குழுக்களில் சேருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் இந்தப் பகுதியில் நுண்நிதி நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த விபரங்களையும் கேட்டறிந்தார். ■

ஊராட்சிப் பகுதியில் இதுவரை சுய உதவிக் குழுக்களில் இணையாத ஏழை மகளிரைக் கண்டறிந்து, அவர்கள் சுய உதவிக் குழுக்களில் சேருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் இந்தப் பகுதியில் நுண்நிதி நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த விபரங்களையும் கேட்டறிந்தார்.

நாகை மகளிர் திட்டத்திற்கு நன்றி

ஏழ்மை நீங்க வழிகாட்டிய நாகை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகிற்கும் மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும் ஆனந்தி தனது நன்றியினைத் தெரிவிக்கிறார்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மாப்படுகையில் வசித்து வருபவர் திருமதி. ஆனந்தி. இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. இவரின் கணவருக்கு நிரந்தர வேலையில்லாததால் குடும்பம் மிகவும் சிரமப்பட்டு வந்தது. இந்த நேரத்தில் நாகை மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் தொழிற்திறன் பயிற்சிக்கு ஆனந்தி தேர்வு செய்யப்பட்டார். பெஸ்ட் தொழிற்பயிற்சிப் பள்ளியில் பெண்களுக்கான கைத்தொழில் பயிற்சியில் ஆனந்தி சேர்ந்து, ஆபரணங்கள் தயாரித்தல், கூடை பின்னுதல், கை எம்ப்ராய்டரிங், பூ கூடை, பெயிண்டிங், பிளாஸ்டிக் மாலைகள், மற்றும் சாம்பிராணி, பத்தி ஆகிய பொருட்களை தயாரிக்கும் பயிற்சிகளைப் பெற்றார். பயிற்சியுடன் ஊக்கத் தொகையும் அவருக்கு வழங்கப்பட்டது. தற்போது ஆனந்தி தீபம் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்து, நிலைமாலை, ஆபரணங்கள் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்து வருவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 2000/- வரை வருவாய் பெற்று வருகிறார். மேலும் வீட்டிலேயே பலருக்கு பயிற்சிகளையும் அளித்து வருகிறார். ■

திருநெல்வேலி

நவீன மின்சார எடை இயந்திரம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுரையின்படி அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் மகளிர் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றன.

திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் கீழ் செயல்படும் கடம்பன் குளம் சுய உதவிக் குழு, தெற்கு வள்ளியூர், கிராம முன்னேற்ற மகளிர் சுய உதவிக் குழு, நதிப்பாறை, பணகுடி, கிராம முன்னேற்ற மகளிர் சுய உதவிக் குழு, லெப்பை குடியிருப்பு, ஆர்.வீ.எஸ். மகளிர் சுய உதவிக் குழு, கள்ளம்புளி, தென்காசி ஆகிய குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளுக்கு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் ஆலோசனையின்படி எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்ட உள்கட்டமைப்பு நிதியிலிருந்து நவீன மின்சார எடை இயந்திரம் வழங்க உத்திரவிடப்பட்டது.

அதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்களால் மக்கள் குறை தீர்க்கும் நாளன்று நவீன மின்சார எடை இயந்திரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. க. முத்துமீனாள், உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

திருவள்ளூர்

விற்பனைக் கண்காட்சி

திருவள்ளூர் மாவட்டத்தில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் தொழிற்திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் வண்ணம் 6 அரங்குகள் அமைக்கப்பட்டு இதில் 10 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தன.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே. பி. பி. சாமி அவர்களும் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்களும் இக்கண்காட்சியை துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. கே. பிருதிவிராஜ் மற்றும் மகளிர் திட்ட அலுவலர் திரு. கே. செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு முகாமிற்கு வந்தவர்கள் மற்றும் ஏராளமானவர்கள் விற்பனைக் கண்காட்சியினைப் பார்வையிட்டு குறைந்த விலையில் தரமான பொருட்களை வாங்கிச் சென்றனர். ■

> உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் வண்ணம் 6 அரங்குகள் அமைக்கப்பட்டு இதில் 10 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தன.

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

வணக்கம். இப்பகுதியில் ஒரு பெண், கணவர் மரணத்திற்குப் பின் எப்படி ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோராக மாறினார் என்பதை இப்பகுதியில் விரிவாகப் பார்ப்போம்.

திருமதி. சரஸ்வதி, இவர்தான் மேலே கூறியபடி சாதனைப் படைத்துக் கொண்டிருக்கும் ஒரு சுய உதவிக் குழு பெண். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் அனந்த கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஏழை குடும்பத்தில் பிறந்தார். குடும்பத்தின் வறுமை அவரை ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க அனுமதிக்கவில்லை. 1972ஆம் வருடம் திரு. நாராயணன் என்பவரை கரம் பிடித்தார். அவர் ஒரு காவல்துறை அலுவலராகப் பணியாற்றி வந்தார். திருமணத்திற்கு பின்னர் திரு. நாராயணன் காவல்துறை பணியை விட்ட விலகி, வரி தீர்வை வசூலிக்கும் பணியை செய்து வந்தார். இருந்தாலும் இவர்களுக்குப் போதிய வருவாய் இல்லாததால் குடும்பம் நடத்த மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

> உலகத்தில் உள்ள அனைத்தையும் இழந்தது போல் சரஸ்வதி உணர்ந்தார். இருந்தாலும் மனம் தளராமல் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியை முறையாகக் கற்று உரிமம் பெற்றார்.

இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. இவர்கள் 1986ஆம் ஆண்டு வேலை தேடி கோவைக்கு வந்தனர். கோவைக்கு அருகே உள்ள பெரியநாயக்கன்பாளையம் கிராமத்தில் குடியேறினர். திரு. நாராயணன் ஒரு தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்த்து வந்தார். சரஸ்வதியும் தன்னால் முடிந்த அளவு பிரச்சனைகளை சமாளித்து தன்னுடைய

இரு குழந்தைகளையும் படிக்க வைத்தார். மகளுக்கு திருமணம் செய்துவித்து சீவலப்பேரி கிராமத்திற்கு அனுப்பி வைத்தார். மகனை இந்திய இராணுவத்தில் சேர்த்தார். பின்னர் மகனுக்கும் திருமணம் செய்து வைத்தார்.

1999ஆம் வருடம் சரஸ்வதிக்கு மிகுந்த துரதிருஷ்டவசமான வருடமாக அமைந்தது. அவருடைய அன்புக் கணவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டு காலமானார். உலகத்தில் உள்ள அனைத்தையும் இழந்தது போல் சரஸ்வதி உணர்ந்தார். இருந்தாலும் மனம் தளராமல் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியை முறையாகக் கற்று உரிமம் பெற்றார். 2005ஆம் வருடம் அப்பகுதியில் உள்ளோர் பிள்ளையார் சுய உதவிக் குழுவை துவங்கினார். சரஸ்வதி அதில் உறுப்பினராக சேர்ந்து இன்று ரூபாய் 20,000/– சேமிப்பாக வைத்துள்ளார். மேலும் முதலில் வங்கிக் கடன் மூலம் ரூபாய் 1,85,000/–க்கு ஒரு ஆட்டோ வாங்கி வங்கி தவணைகளை தவறாமல் கட்டி முடித்தார். பின்னர் அதனை விற்றுவிட்டு தற்போது ரூபாய் 1,48,000/–க்கு ஒரு புதிய ஆட்டோ வாங்கினார். அதில் முன்பணமாக ரூபாய் 68,000/– செலுத்தினார். மீதமுள்ள கடன் தொகைக்கு மாதம் ரூபாய் 3,000/– வீதம் தவணை தவறாமல் செலுத்தி வருகிறார்.

ஆரம்பத்தில் அவர் ஆட்டோ ஓட்ட ஆரம்பித்தபோது அதனை பார்த்து சிரித்தவர்கள் பல பேர். ஆட்டோ ஓட விடாமல் எதிர்த்தவர்கள் சில பேர். இருந்தாலும் பாரதியார் கனவு கண்ட ஒரு வீரப்பெண்ணை போல் யாருடைய உதவியும் இல்லாமல் தன்னந்தனியாக அனைத்து பிரச்சனைகளையும் துணிவுடன் சந்தித்து ஏளனங்களை படிக்கட்டுகளாக அமைத்து வெற்றி கண்டார். சாலையில் அனைத்து ஆட்டோக்களையும் ஆண்கள் ஓட்டிச் செல்லும் போது இவர் ஒரு பெண்ணாக வீரத்துடன் ஆட்டோவை ஓட்டிச் செல்வது சுய உதவிக் குழுவின் பெருமையை பறைசாற்றுகிறது.

உணவு சமைத்து பரிமாற அவருக்கு பணம் கிடைத்ததோடு, அவர் மளிகைக் கடையில் உள்ள பொருட்களும் அதிகமாக விற்பனை ஆகத் துவங்கியது.

இந்த சுய உதவிக் குழுக்கள் திட்டம் சாதாரண கிராமத்து பெண்களையும் சாதனையாளர்களாக மாற்றுகிறது என்பதில் சற்றும் ஐயமில்லை. சரஸ்வதி ஒவ்வொரு மாதமும் ரூபாய் 12,000/– வரை ஆட்டோ ஓட்டுவதன் மூலம் வாடகையாக சம்பாதித்து கடன் கட்டியது போக மீதமுள்ள தொகையை தன்னுடைய செலவுக்கு வைத்துக் கொள்கிறார். இன்று அவருக்கு வயது 55. இந்த சூழ்நிலையிலும் யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் சுயமாக தொழில் செய்து மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை தொடர்கிறார். தன்னுடைய மகன் மற்றும் மகளின் உதவியை எதிர்பார்க்கவில்லை.

எனவே சுய உதவிக் குழுவில் இணையும் பெண்கள் தங்களுக்கு எதிராக வரும் சவால்களை துணிவுடன் சந்தித்து வெற்றி கண்டு சாதனையாளர்களாக மாறி சரித்திரங்கள் படைக்க வேண்டும். ■

சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு...

'தனி மரம் தோப்பாகாது, ஒரு கை ஓசை வராது' என்பதெல்லாம் பழமொழி மட்டும் அல்ல. உலக யதார்த்தமும் கூட. அதனால் தான் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. தனிக்குழுவாக சாதிக்க முடியாதவைகளை கூட்டாக இணைந்து சாதிக்க உருவாக்கப்பட்டவைதான் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு.

கூட்டமைப்பில் சுய உதவிக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பெரிய பங்கு உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழு ஒவ்வொன்றும் தங்கள் சார்ந்துள்ள குடிசைப் பகுதி / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக வேண்டும்.

கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் தவறாது முனைப்புடன் கலந்த கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பின் நிர்வாகத்தை தேர்ந்தேடுப்பதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்படவும் ஒவ்வொரு குழுவும் உண்மையாகவும், நேர்மையாகவும் செயல்பட வேண்டும்.

கூட்டமைப்பின் தங்கள் குழு பிரதிநிதியை ஒவ்வொரு குழு கூட்டத்திலும் கூட்டமைப்பு நிகழ்வுகளை கூறக் கேட்டு விவாதிக்க வேண்டும்.

கூட்டமைப்பில் இருந்து கேட்கப்படும் தகவல்களை உரிய நேரத்தில் உண்மையான தகவல்கள் வழங்க வேண்டும்.

கூட்டமைப்பு ஒற்றுமையுடன் செயல்பட எந்த ஒரு பங்கமும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பில் இருந்து நிதியுதவி பெறும் பட்சத்தில் காலம் தாழ்த்தாது உரிய நேரத்தில் வட்டியுடன் திருப்பி செலுத்தி கடனை நிறைவு செய்ய வேண்டும்.

கூட்டமைப்பினை போன்ளே ஊராட்சியில் நடைபெறும் கிராம சபை கூட்டத்திலும் சுய உதவிக் குழுவினர் கலந்த கொண்டு தங்கள் பகுதி முன்னேற்றத்திற்கான திட்டங்கள் குறித்து தெரிந்த கொள்ளவும், விவாதிக்கவும் வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் பின்பற்றினால் நம் குழுதான் வரும் ஆண்டில் மாநில அளவில் சிறந்த குழுக்கான மணிமேகலை விருது பெறும் குழுவாகும்.

– வி. எம். சிவகுமார்

திருநெல்வேலி

குழுவிற்குப் பாராட்டு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் புதுதில்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியில் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் வெல்கம் மகளிர் சுய உதவிக் குழு கலந்து கொண்டு, வாழைநார் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். இதில் ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் இக் குழுவால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் இக்குழுவின் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தார்கள். ■

விவசாய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்கு வேண்டிய விதைகள், உரம் போன்றவற்றை பெற்றுத் தருதல், மண்புழு உரம், பஞ்சகாவ்யா, அமுத கரைசல் மற்றும் பூச்சி விரட்டி போன்றவைகள் குறித்த விபரங்களைப் பெற்றுத் தருதல் போன்றவை குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம்

ராஜீவ்காந்தி ஆண்கள் சுய உதவிக் குழு

விழுப்புரம் மாவட்டத்தில் வி. மாத்தூர் கிராமத்தில் ராஜீவ்காந்தி ஆண்கள் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மலர், காய்கனி போன்றவற்றை சாகுபடி செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். சுழல் நிதி, பொருளாதாரக் கடன் நேரடிக் கடன் போன்றவற்றை பெற்று, அவைகளை தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மேலும் ஆரம்பக் கல்வி, சுகாதாரம், குடிநீர், மின்சாரம், பொது விநியோகம், கழிவு நீர் அகற்றுதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் குறை தீர்க்கும் மன்றத்தின் மூலம் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். ■

PRESS & REGISTRATION OF BOOKS ACT
Registration of News papers (Control) Rules 1957
FORM IV 9 (SEE RULE 8) Statement about ownership Particulars of
TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM

1. Place of Publication	: MUTRAM SOCIETY Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai –600 032
2. Periodicity of its publication	: Monthly
3. Printer's Name Nationality Full Address	: **V. RAMESH** : Indian : **CHENNAI MICRO PRINT PRIVATE LTD,** New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29.
4. Publisher's Name Nationality Full Address	: **S.CHINNAPPAN**. : Indian : Tamilnadu Corporation for Development of Women Ltd., No: 100. Anna Salai, Guindy, Chennai – 600 032.
5.Editor's Name Nationality Full Address	: **S.CHINNAPPAN**. : Indian : Tamilnadu Corporation for Development of Women Ltd., No: 100. Anna Salai, Guindy, Chennai – 600 032.
6. Owner's Name	: **MUTRAM SOCIETY** Representated by its Secretary S.CHINNAPPAN.

I, S.CHINNAPPAN, hereby that the particulars given adove are true to the best of my knowledge.

Chennai: 600 032.
Date: 25–02–2011.

(**S.CHINNAPPAN**)
Signature Publisher

கடலூர்

கற்று உலாவாக மாறிய சுற்றுலா

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்கு பிந்தய நிலையான வாழ்வாதாரத்திட்டத்தின்சார்பில்கடலூர்பெரியகுப்பம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கல்வி சுற்றுலா சென்று வந்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சூரிய வெளிச்சத்தினைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் முறையையும், சூரிய சக்தியைக் கொண்டு காய்கறிகளை உலர வைத்தல், கடல் நீரைத் தூய நீராக மாற்றுதல், பையோடீசல் தயாரிக்கும் முறை, அவற்றினால் ஏற்படும் பயன்கள், தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் செயல்பாடுகள் போன்றவை குறித்து விபரமாக அறிந்து கொண்டனர்.

பிச்சாவரத்திலுள்ள சதுப்பு நிலக் காடுகள், இலை குட்டை புதர்காடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகள் சுனாமி அலையை தடுக்கும் திறன் பெற்றவை என்றும், இவைகள் அலையாத்திக் காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டனர்.

பரங்கிப்பேட்டையில்உள்ளகடல்வாழ்உயிரினங்களின் அருங்காட்சியகத்தில் பலவகையான கடல் வாழ் உயிரினங்கள், அவற்றின் அமைப்பு போன்றவை குறித்த விபரங்களையும் அறிந்து கொண்டனர். பெரியகுப்பத்தில் செயல்படும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீரை சுத்திகரிக்கும் முறையையும் கண்டு விபரங்களை அறிந்து கொண்டனர்.

IFAD திட்டத்தின் மூலம் கல்வி சுற்றுலா சென்று வந்ததன் மூலம் பொது அறிவும், கல்வியும், நாட்டுநடப்பும் சுனாமி பாதித்த கடலூர் பெரிய குப்பம் பள்ளி மாணவர்களுக்கு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ■

தூத்துக்குடி

விற்பனைக் கண்காட்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் செயல்பட்டு வரும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் மூலம் மகளிர் மேம்பாடு அடையும் வண்ணம் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி அனைத்து மாவட்டங் களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகளிர் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலையும், அவர்களுக்கு ஊக்கமும் கிடைத்து வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் இராமையா மகாலில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி சமீபத்தில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள் இக்கண்காட்சியினை துவக்கி வைத்து சிறப்பித்தார்கள்.

இக்கண்காட்சியில் 30 அரங்குகள் அமைக்கப்பட்டு, அதில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்கள் அனைத்தும் தூத்துக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான பொருட்கள் என்பதும், விலை குறைவான பொருட்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி துவக்க விழாவில் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழக உறுப்பினர் திரு. என். பெரியசாமி, மகளிர் திட்ட அலுவலர் திரு. ஆ. செல்வம், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. சோ. ந. நாகப்பன், திரு. செந்தில்குமார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மகளிர் குழுக் கூட்டமைப்பினர், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

திருமதி. ருக்மணி லட்சுமிபதி

விடுதலைப் போராட்ட வீராங்கனை. சமூகச் சீர்திருத்தவாதி. மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். தீண்டாமை எதிர்ப்பியக்கத்தின் முன்னோடி. சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர். இப்படி பல பெருமைகளையும் பரிமாணங்களையும் ஒரு சேரக் கொண்டவர் திருமதி ருக்மணி லட்சுமிபதி.

சிறையில் இருந்தபோது இந்தி மொழி கற்றுக் கொண்டார். பகவதத்தைப் பாராயணம் செய்தார். பின்பு, ஏப்ரல், 1931இல் ஏற்பட்ட காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ருக்மணி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1932இல் காவல்துறை நடத்திய தடியடியால் காயம்பட்ட சுப்பாராவிற்குக் காவல் துறையின் தடையையும் மீறி முதலுதவி செய்து, மருத்துவமனையில் சேர்த்தார். அதிகாரத்தையும், அடக்குமுறையையும் கண்டு அஞ்சாதவராய் தனக்குச் சரியென்று பட்டதை செய்யும் தைரியமும் துணிச்சலும் நிறைந்த பெண்மணியாக ருக்மணி அம்மையார் விளங்கினார்.

1932 இல் அந்நியத் துணி நிராகரிப்பு ஊர்வலத்தில் தலைமை ஏற்றுச் சென்ற போது கைது செய்யப்பட்டு, திரும்பவும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அப்பொழுது அம்புஜம்மாள், ஜானம்மாள், வை.மு. கோதைநாயகி, துர்க்காபாய், கமலா கிருஷ்ணசாமி, சேலம் காமாட்சியம்மாள், சிதம்பரம் பாரதி போன்றோரும் கைதிகளாக உடன் இருந்தனர்.

1936இல், காரைக்குடியில் நடைபெற்ற மாகாண காங்கிரஸ் மாநாட்டிற்கு, திருமதி. ருக்மணி அம்மையார் தலைமை தாங்கினார். 1937இல் நடைபெற்ற தேர்தலில் சென்னையில் மாதர் தொகுதியில் போட்டியிட்டு, அத்தேர்தலில் வெற்றியும் பெற்றார். திரு. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்பட்டது. அப்பொழுது சட்டப் பேரவையின் துணைத் தலைவராக

அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பதவி வகித்த முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

1936இல் சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரே நேரத்தில் சட்டசபை உறுப்பினராகவும், மாநகராட்சி உறுப்பினராகவும் இரண்டு பொறுப்புகளை வகித்தார். அப்பொழுது 'தூய்மையான சென்னை' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார் அம்மையார். அப்போது சென்னை மேயராக இருந்த சத்தியமூர்த்தி அவர்கள் இத்திட்டத்திற்குப் பெரும் ஆதரவு தந்தார். அத்துடன் சென்னை நகர பெண்களும் தங்களது ஒருமித்த ஆதரவை அம்மையாருக்கு அளித்தனர்.

பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த பெண் தலைவர்களை ஒருங்கிணைத்து இதற்காகச் செயலாற்ற வைத்தார் திருமதி. ருக்மணி லட்சுமிபதி அம்மையார். வண்டிகள் மூலம் குப்பைகளை அகற்றுதல், ஆங்காங்கே கழிப்பறைகள் அமைத்தல், சாலைதோறும் தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற திட்டங்களையும் அம்மையார் செயல்படுத்தினார்.

1940இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். அதன் காரணமாக, அவர் வகித்து வந்த மாநகராட்சி பதவி பறிக்கப்பட்டது.

1942 முதல் 45 வரையிலான காலகட்டங்களில் ருக்மணி அம்மையார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக இருந்து திறம்படக் கட்சியை நடத்தியுள்ளார். ஏனெனில், 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் காமராசர், பக்தவத்சலம், சத்தியமூர்த்தி, மா.பொ.சி. போன்ற தலைவர்கள் சிறைப்பட்டதால், அம்மையாரின் பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

1946இல் நடந்த தேர்தலில் சென்னைத் தொகுதியிலிருந்து அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டார். டி.பிரகாசம் அவர்கள் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் திருமதி. ருக்மணி லட்சுமிபதி அம்மையார் அவர்கள் பொது சுகாதாரத் துறை அமைச்சராகப் பதவி ஏற்றார். அவர் அமைச்சராக ஒரு வருட காலம்தான் பணியாற்றி உள்ளார் என்றாலும், அக்காலக் கட்டத்தில் அவரது பணி முக்கியமானதாகும்.

> **பெண்களுக்குச்** சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து, அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார். அதே ஆண்டு, பாரீஸில் நடைபெற்ற 10ஆவது உலகப் பெண்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டு 'பெண்கள் முன்னேற்றம்' குறித்து மிகச் சிறப்பாக சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.

ஆயுர்வேதம், யுனானி முதலிய மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். மலேரியா நோய் ஒழிப்புக்கு மும்முரமாகப் பாடுபட்டார். மதுரையிலும், குண்டூரிலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்காகக் கையெழுத்திட்டார். மருத்துவத் துறையின் மிகப் பெரிய பதவிகளுக்கு இந்தியரை நியமித்தார். சென்னை மாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கத்தை நிறுவினார். திருமதி. ருக்மணி லட்சுமிபதி 1951 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி இவ்வுலகை நீத்தார். தம் வாழ்வைத் தாய் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் அர்ப்பணித்த அம்மையார், தமிழகத்தின் புகழை நிலை நாட்டியவர்களுள் குறிப்பிடத் தக்கவர் ஆவார். ■

புத்தாக்கப் பயிற்சி

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றத்தின் தலைவர்கள் மற்றும் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளின் தலைவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சிகள் உதவி இயக்குநர் திரு. மணி அவர்கள் தலைமை வகித்தார். சென்னை ஊரக வளர்ச்சி நிறுவன விரிவுரையாளர் திரு. சிவராமகிருஷ்ணன் அவர்கள் பயிற்சி அளித்தார்.

ஊராட்சிக்கு அரசு ஒதுக்கும் நிதியை ஊராட்சி மன்ற தலைவர்கள் எந்த வகையில் பயன்படுத்த வேண்டும், எந்த பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும், ஊராட்சி வரவு – செலவு கணக்குகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது ஊராட்சி மன்ற தலைவர்களின் வினாக்களுக்கு திரு. சிவராமகிருஷ்ணன் விளக்கம் அளித்தார்.

இந்த முகாமில் ஊராட்சிக் குழு செயலாளர் திரு. அப்துல் ஜபார், உதவி இயக்குநர் திரு. சுப்பிரமணி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு. ராஜவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். 100க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். ■

மாதங்களும் - தாக்கும் நோய்களும்



ஜனவரி-பிப்ரவரி மாதங்கள் – பனிக்காலம் என்பதால் தோல் நோய்கள் ஏற்படும். குளிர் அதிகமாக இருப்பதால் நெஞ்செரிச்சல், தொண்டை வலி, இரத்த அழுத்தம் ஆகியவை ஏற்படும்.

முன்எச்சரிக்கை – நெஞ்சுஎரிச்சல், சுவாசத்தடை ஆகியவை தொடர்ந்தாலோ அதிகமாக வலி எடுத்தாலோ அது இதய நோயாக இருக்கலாம். உடனே இரத்த பரிசோதனை செய்து கொள்வது நல்லது. உளுந்து, கோதுமை போன்றவற்றை அதிகமாக சேர்த்துக் கொள்வது நலம். அதேபோல் கீரை வகைகளையும் சேர்த்துக் கொள்வது நல்லது. எண்ணெய் உடல் வெப்பத்தை சீராக்கும். வெயில் நம் உடம்பில் படுமாறு இருக்கலாம்.

தவிர்க்க வேண்டியவை – குளிர்ந்த நீர், குளிர் பானங்கள், குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் ஆகியவற்றை சாப்பிடக் கூடாது. அதேபோல் குளிர்ந்த நீரில் குளிப்பதையும் தவிக்கலாம்.

மார்ச்-ஏப்ரல் மாதங்களில் வெய்யிலின் தாக்கம் அதிகரிக்கும், உடலில் நீரின் தன்மை வற்றிப் போகும். நமது உடலில் வெப்பத்தின் அதிகரிப்பால் வாந்தி, வயிற்றுப் போக்கு, ஆஸ்துமா, இருமல், பசியின்மை, அலர்ஜி, தலைவலி மற்றும் வைரஸ் நோய்கள் நம்மை தாக்குகின்றன.

முன் எச்சரிக்கை – ஆஸ்துமா வந்தால் கவனமாக இருக்கவும். முடிந்தால் தொடக்கத்திலேயே அதைக் கட்டுப்படுத்தி விடவும். இல்லாவிட்டால் நிமோனியாவாக மாறிவிடும். பசியின்மை ஏற்பட்டால் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. எளிய உணவுகளை அதிகமாக சாப்பிடவும். செரிமானக் கோளாறுகள் அடிக்கடி ஏற்படும் என்பதால் சுக்கு, சீரகம் கலந்த நீரைக் குடிக்கப் பயன்படுத்தலாம்.

தவிர்க்க வேண்டியவை – உளுந்து சேர்த்த உணவுகளையும், பகலில் தூங்குவதையும் தவிர்க்கவும்.

மே-ஜூன் மாதங்களில் பருவக்காலம் மாற்றம் ஏற்படும் சமயத்தில் வெப்பம் உச்சத்தை அடையும். இதனால் அம்மை நோய், கண் தொடர்பான பிரச்சனைகள், மஞ்சள் காமாலை, வாத நோய், மூட்டுப் பிரச்சனைகள், உடல் வலி போன்றவையும், குழந்தைகள் மண்ணில் விளையாடுவதால் அவர்களுக்கு தோல் நோய்களும் ஏற்படும்.

முன் எச்சரிக்கை – அம்மை நோய் மற்றும் கண் தொடர்பான நோய்கள் விரைவில் அடுத்தவருக்கும் பரவும் என்பதால் மிகவும் கவனமாக இருப்பது நல்லது, நமது உடலை சுத்தமாகவும், சுகாதாரமாகவும், வைத்திருக்க வேண்டும். பழங்களை சுத்தமான நீரில் நன்றாக கழுவி சாப்பிடவும். இனிப்பான உணவு வகைகள், உளுந்து, காய்கறிகள் போன்றவற்றை அதிகமாக சாப்பிடவும்.

தவிர்க்க வேண்டியவை – கடினமாக உடற்பயிற்சிகள் செய்வதை தவிர்க்க வேண்டும். வெயில் உடம்பில், தலையில் படாமல் இருப்பது நல்லது.

நம் நாட்டில் பல்வேறு காலநிலைகள் நிலவுகின்றன. வெப்பம், மழை, குளிர் போன்றவை மாறி மாறி வருகின்றன. இதன் காரணமாக நாம் பலவிதமான நோய்களின் தாக்குதலுக்கு ஆளாகிறோம். இந்த இதழில் நமக்கு ஏற்படும் நோய்கள் குறித்து காணலாம்.

ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் சிக்கன் குனியா போன்ற நோய்கள், கண் நோய், பசியின்மை, அலர்ஜி ஆகிய பிரச்சனைகளும் ஏற்படும்.

முன் எச்சரிக்கை – காய்ச்சல், கண் நோய் போன்ற தொற்று நோய்களின் அறிகுறிகள் தெரிந்தவுடன் மருத்துவரை அணுகவும். அரிசி, கேரட், உளுந்து, பச்சை பட்டாணி, மசாலா சேர்த்த உணவுகளை சாப்பிடலாம்.

தவிர்க்க வேண்டியவை – மதிய தூக்கம் கூடாது. அலர்ஜி ஏற்படுத்தும் உணவுகளையும், அதிக சூடான உணவுகளையும் சாப்பிடக் கூடாது. வெயிலில் அலையக் கூடாது. கொசுக்கடியினைத் தவிர்க்கவும். சுற்றுப்புறத்தினை சுத்தமாக வைத்துக் கொள்வது நல்லது.

செப்டம்பர்-அக்டோபர் மாதங்கள் மழைக்காலம் என்பதால் தொற்று நோய்கள், தலைவலி, ஒற்றைத் தலைவலி, இதய நோய்கள், நெஞ்சு எரிச்சல், பித்தம் தொடர்பான நோய்கள், கண் நோய் ஆகியவையும் ஏற்படும்.

முன் எச்சரிக்கை – இதயத்தில் ஏதாவது பிரச்சனை என்றால் உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை சாப்பிட வேண்டும். கண்களில், காதுகளில் ஏதாவது வலி ஏற்பட்டாலும் கவனமாக இருக்கவும். பால், பால் பொருட்கள், மாமிசம் ஆகிய உணவுகளை சாப்பிடலாம்.

தவிர்க்க வேண்டியவை – குளிர்ந்த உணவு, பகல் தூக்கம் போன்றவை கூடவே கூடாது.

நவம்பர்-டிசம்பர் மாதங்களில் மழையும் பனியும் சேர்ந்த காலம் என்பதால், சுவாசத் தடை, தும்மல், வயிற்றுக் கோளாறு, தோல் நோய்கள் போன்ற பிரச்சனைகளும் ஏற்படும்.

முன் எச்சரிக்கை – இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டோடு வைத்திருக்கவும். எண்ணெய் உணவுகளை அளவோடு சாப்பிடவும். எண்ணெய் குளியல் நல்லது. உடலில் வியர்வை சொட்டும் அளவிற்கு உடறபயிற்சி செய்வது அவசியம். கெட்டியான உணவுகளை சாப்பிடுவதும் நல்லது.

தவிர்க்க வேண்டியவை – குளிர்ந்த நீர், குளிர்பானங்கள் மற்றும் குளிர்பதனப் பெட்டியில் வைத்துள்ள உணவு களையும், இரவில் குளிப்பதையும் தவிர்க்கவும். ■

மாதங்களும் - தாக்கும் நோய்களும்

வளர்க வணிகம்

மொத்தமாய் உழைத்து
மெத்தவே உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின்

மென் பொம்மைகள்

ரோஜா மகளிர் சுய உதவிக் குழு,
வேலூர் மாவட்டம்.
செல்பேசி: 94869 47368

கலைப் பொருட்கள்

அம்மன் மகளிர் குழு,
சென்னை மாவட்டம்.
செல்பேசி: 93806 41348

சணல் பைகள்

காமதேனு சுய உதவிக் குழு
திருவண்ணாமலை.
செல்பேசி: 97911 31355

பனைஓலைப் பொருட்கள்

அன்னை மாயா மகளிர் குழு,
நாகப்பட்டினம் மாவட்டம்.
செல்பேசி: 96263 83955

பருத்திப் புடவைகள்

ஸ்ரீ அம்பிகை மகளிர் குழு,
திண்டுக்கல் மாவட்டம்.
செல்பேசி: 97896 97215

மரப் பொருட்கள்

சிற்பி ஆடவர் சுய உதவிக் குழு,
பெரம்பலூர் மாவட்டம்.
செல்பேசி: 94435 91523

நிகழ்வு

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிப் பட்டறை

மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மறுசீரமைத்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டம் 2011–11ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து குடும்பங்களையும் சுய உதவிக் குழுவில் இணைப்பது, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குவது, சுழல் நிதி மானியத்தினை உயர்த்துவது, சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்குவது மற்றும் ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்குவது போன்ற அம்சங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் உள்ள ஒருசில கூறுகள் ஏற்கனவே தமிழ்நாடு மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களில் உள்ளன. எனினும் இத்திட்டம் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை விட மேம்படுத்தப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை சமீபத்தில் சென்னை, தி.நகர் ஜி.ஆர்.டி. ஹோட்டலில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சிறப்பம்சம் குறித்து விளக்கிப் பேசினார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., நபார்டு வங்கியின் டி.ஜி.எம். திரு. எஸ். அதிர்ஷ்டக்குமார், மாநில அளவிலான வங்கியாளர் கமிட்டியின் பிரதிநிதி திரு. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மறுசீரமைத்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டம் 2011–11ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

50 வயதினை எட்டி, வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமலிருக்கும் ஏழை உழைக்கும் திறனற்ற பெண்களுக்கான

ஓய்வூதியத் திட்டம்

50 வயதினை நிறைவு செய்தும் திருமணமாகாமல் பிழைப்பூதியத்திற்கு வழியற்ற பெண்களுக்கு, '50 வயதினை எட்டி, வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமலிருக்கும்ஏழை உழைக்கும் திறனற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்' என்ற பெயரில் தமிழக அரசு வழங்கி வருகிறது.

வழங்கப்படும் நிதியுதவி

மாதம் ஒன்றுக்கு ரூ. 400/–

பயன் பெறுபவர்

50 வயதினை நிறைவு செய்தும் திருமணமாகாத ஏழை உழைக்கும் திறனற்ற பெண்கள்

தகுதிகள்/நிபந்தனைகள்

1) 50 வயதினை நிறைவு செய்தும் திருமணமாகாத பெண்ணாக இருக்க வேண்டும்.
2) எவ்வித வருமானமோ அல்லது பிழைப்பூதியத்திற்கான ஆதரவு வழியோ பெற்றிருத்தல் கூடாது.
3) பிச்சை எடுத்தலை தொழிலாக கொண்டிருத்தல் கூடாது.

அளிக்கப்படும் இதர உதவிகள்

ஆண்டுக்கு இருமுறை தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு ஒரு இலவச சேலை வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் அன்றாடம் இலவச சத்துணவு வழங்கப்படும். இவர்களில் சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

வட்டாட்சியர் அலுவலகத்தில் உரிய படிவங்களை பெற்று, அவற்றை பூர்த்தி செய்து அல்லது வெள்ளைத் தாளில் விண்ணப்பப் படிவம் எழுதி, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆகியோருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை பரிசீலிக்க எடுத்துக் கொள்ளப்படும் கால அளவு

விண்ணப்பங்கள் பெறப்பட்ட ஒரு மாத காலத்திற்குள்

அணுக வேண்டிய அலுவலர்

வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

குறைபாடுகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர்

வருவாய் கோட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்

வாழவைக்கும் கறவை மாடுகள்

எத்தனையோ ஏழைகளின் குடும்பங்களை வாழ வைக்கிறது கறவை மாடுகள் என்றால் அது மிகையாகாது. வயல்வெளிக்கு வேலைக்கு சென்று விட்டு கையில் சிறிது புற்களைக் கொண்டு வந்தால் போதும், ஒரு விவசாய கூலி தொழிலாளர் இரண்டு மாடுகள் வளர்ப்பதற்கு கூடுதல் நேரம் செலவு செய்ய தேவையில்லை. ஆனால் கூடுதலாக வருமானம் ஈட்ட முடியும்.

மல்லிகை பெண்கள் சுய உதவிக் குழு ஊக்குநர் இராமலட்சுமி அவர்கள் கூறும் போது, குழுவில் 20 உறுப்பினர்கள் இருக்கிறோம். எங்கள் குழுவிற்கு பயிற்சிகள் வழங்கும் போதெல்லாம் தொழில் செய்வது பற்றி கூறுவார்கள். இதனால் கறவை மாடு வளர்க்க முடிவு செய்து வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பணியாளர்கள் உதவியுடன் தொழில் திட்டம் தயார் செய்து மகளிர் திட்டத்தின் மூலம் பொருளாதாரக் கடன் ரூபாய் 8,20,000/– பெற்றோம். இதில் ரூபாய் 1,25,000/– மானியம். முதல் தவணையாக ரூபாய் 3,40,000/– வங்கி மூலம் கடன் பெற்று எங்களின் பங்களிப்பாக தலா ரூபாய் 3,000/– வீதம் ரூபாய் 60,000/– செலுத்தி 20 கறவை மாடுகள் வாங்கினோம்.

இன்று ஒவ்வொரு கறவை மாடும் நாள் ஒன்றுக்கு 8 லிட்டர் பால் தருகிறது. இதனால் பண்ணைக்கு தினமும் 160 முதல் 180 லிட்டர் வரை பால் விற்பனை செய்து வருகிறோம். ஒரு லிட்டர் பால் ரூபாய் 18/–க்கு விற்பதால் மாதம் ரூபாய் 4,320/– வருமானம் கிடைக்கிறது. தினமும் ஒரு மாட்டுக்கு புண்ணாக்கு, தவிடு என ரூபாய் 50/–க்கு வாங்குகிறோம். வங்கிக் கடனாக மாதந்தோறும் அசல் ரூபாய் 20,000/–மும், வட்டியாக ரூபாய் 3,400/–மும் செலுத்தி வருகிறோம். இத்தொழில் மூலம் அனைத்து செலவுகளும் போக குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூபாய் 1,900/– கூடுதலாக கிடைக்கிறது.

திடீரென மாடுகள் நோய்வாய்ப்பட்டால் எதிர் காலத்தில் ஏற்படும் இழப்பீட்டைத் தவிர்க்க ரூ. 750/– செலுத்தி காப்பீடு செய்து உள்ளோம். இரண்டாம் தவணை நிதி வாங்கி கடன் பெற்று, மேலும் ஒரு கறவை மாடு வாங்கி தொழில் செய்ய திட்டமிட்டுள்ளோம். மேலும் ஆவின் மூலம் மகளிர் பால் பண்ணை உருவாக்கி நேரடியாக விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம் என்று நம்பிக்கையுடன் கூறினார். ■

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அடிப்படை செயல்பாடுகளில் ஒன்று வாழ்வாதார வள ஆய்வு. இதன் மூலம் எத்தனையோ தொழில் வாய்ப்புகள் கண்டறியப்பட்டதாலும் மாடு வளர்ப்பு என்பது அடிப்படையாக இருக்கும். இவ்வாறு தூத்துக்குடி மாவட்டம் கயத்தார் ஒன்றியம் தெற்கு கழுகுமலை ஊராட்சியில் மாடு வளர்ப்பு கண்டுபிடிக்கப்பட்டு இன்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டச் சிறப்பு

கரியைக் காசாக்கும் கூட்டமைப்பு தொழில்

காசை கரியாக்காதே என்பது கிராமத்தில் வழக்கமான சொல். ஆனால் கரியைக் காசாக்கிக் கொண்டிருக்கிறது ஒரு தொழில் கூட்டமைப்பு. தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஒன்றியம் கீழ அருணசலபுரம் கிராம மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவது கருவேல மரம். கருவேல மரத்தை வெட்டி அதில் இருந்த கரிக்கட்டை தயாரிப்பதுதான் அவர்களின் தொழில். மழைக்காலங்களில் வேலை இருக்காது. வேறு மாற்று தொழிலும் கிடையாது. மீதி உள்ள காலங்களில் ஓயாது உழைத்தாலும் மிஞ்சுவது என்னமோ கடன்தான் என்பது இம்மக்களின் ஏக்கம். இவர்களின் இந்த வாழ்க்கைக்கு ஒளி விளக்கேற்ற வந்தது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்கிறார் கூட்டமைப்பின் செயலாளர் திரு. ஜெயபால்.

தினக்கூலியாக கூப்பிட்ட நபர்களிடம் வேலைக்கு சென்றுக் கொண்டிருந்த எங்களுக்கு கூட்டாகத் தொழில் செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து அடிக்கடி கூறினார்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பணியாளர்கள். கூட்டமைப்புப் பற்றி புரிந்து கொள்வதற்கும், நம்பிக்கை ஏற்படுவதற்கும் எங்களுக்கு நாளாகியது. இருந்தாலும் பெருமுயற்சியில் 14 இலக்கு மக்கள் சேர்ந்து தொழில் குழுவை உருவாக்கினோம்.

தொழில் செய்வதற்குத் தேவையான முதலீட்டிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் வங்கியின் உதவியை நாடுவது என்று முடிவு செய்தோம். அதன்பேரில் தொழில் திட்டம் தயார் செய்தோம். எங்களின் பங்களிப்பு ரூபாய் 16,000/–மும், வாழ்ந்து காட்டுவோம் திட்ட உதவியாக ரூபாய் 80,670/–ம் மற்றும் வங்கிக் கடனாக ரூபாய் 60,000/–ம் ஆக மொத்தம் ரூபாய் 1,61,340/–திற்கு தொழில் திட்டம் தயார் செய்து வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற்றோம். எங்கள் கூட்டமைப்பை சங்கப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தோம்.

2008ம் ஆண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்ட நிதி மானியமாக ரூபாய் 80,670/–ம், தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மூலம் ரூபாய் 60,000/–ம் பெற்று தொழில் தொடங்கினோம். வெற்றிகரமாக இதுவரை 62 ஏக்கர் கருவேலங் காடுகளை குத்தகைக்கு எடுத்தோம். அதில் 168 டன் மரம் வெட்டப்பட்டு கரிமூட்டம் போட்டோம். அதிலிருந்து 5.6 டன் கரி கிடைத்தது. கரிமூட்டம் போடுவதற்கான மொத்தச் செலவு ரூபாய் 7.25 இலட்சம் ஆனது. ஒரு டன் கரி ரூபாய் 8,500/– வீதம் மொத்தம் ரூபாய் 8.25 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளோம்.

வாழ்ந்து காட்டுவோம் திட்ட உதவியாக ரூ. 80,670/–ம் மற்றும் வங்கிக் கடனாக ரூ. 60,000/–ம் ஆக மொத்தம் ரூ. 1,61,340/–திற்கு தொழில் திட்டம் தயார் செய்து வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மாவட்ட அலுவல கத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற்றோம்.

கிடைக்கும் இலாபத்திலிருந்து வங்கிக் கடனைத் தவறாமல் செலுத்தி வருகிறோம். நாங்கள் கூட்டாக தொழில் செய்ததில் கூலி மற்றும் இலாபம் சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 6,700/– கிடைத்துள்ளது.

இதற்கு முன்பு கூலி வேலை செய்த பொழுது மாதம் ரூபாய் 3,500/– மட்டுமே கிடைத்தது. வேலையும் அதிக நேரம் செய்ய வேண்டியுள்ளது. தற்பொழுது சொந்தமாக தொழில் செய்வதால் அதிக வருமானம் கிடைக்கிறது. மன நிறைவோடும் வேலை செய்கிறோம்.

இன்றும் தொழிலை வெற்றிகரமாக நடத்துவது எப்படி என்றும், கணக்கு பராமரிப்பு பற்றியும் பல்வேறு பயிற்சி கொடுத்து வருகிறது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றிய வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சிறப்பாக செயல்பட வாழ்த்துகிறோம். ■

நலிவுற்றோர் நலனில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

நலிவுற்றோர் நலனில் நாட்டமுடன் செயல்படும் திட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்றால் அது மிகையாகாது. தூத்துக்குடி மாவட்டம் தெற்கு கழுகுமலையில், யாருடைய ஆதரவின்றி, சாப்பாட்டுக்குக் கூட வழியின்றி மகளின் தயவில் வாழ்ந்து வந்தவர் பர்வதம்மாள் என்ற ஏழை விதவைப் பெண்மணி.

சிமெண்ட் தொழில் செய்து விற்பனை செய்யும் இவரது குடும்பம் தற்பொழுது முதலீடு செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. இதனால் பர்வதம்மாளுக்கு குடும்பத்தில் உரிய மரியாதை இல்லை. விரக்தியில் இருந்த பர்வதம்மாளுக்கு வழிகாட்டியது வாழ்ந்து காட்டுவோம் திட்டம்.

நலிவுற்றோர்கள் தொழில் செய்ய வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் கடன் வழங்கப்படுகிறது என்பதை அறிந்து விண்ணப்பம் செய்தார். அதன் மூலம் ரூபாய் 8,000/– கடன் பெற்று, தன் மகன் உதவியுடன் தொழில் செய்ய ஆரம்பித்தார். சிமெண்ட் தொட்டி, பீரோ கல், ஜன்னல், கிராதி, ஸ்டாண்ட், மாட்டுத் தொட்டி என பல்வேறு பொருட்களை சிமெண்டில் செய்து கிராமங்களுக்குச் சென்று விற்பனை செய்கிறார்.

இது குறித்து பர்வதம்மாள் கூறும்போது, “ஒரு மூட்டை சிமெண்ட் மூலம் 5 தொட்டிகள் வரை செய்ய முடியும். ஒரு தொட்டியை ரூபாய் 300/–க்கு விற்கிறேன். இதனால் எல்லா செலவுகளும் போக 100 வரை இலாபம் கிடைக்கிறது. மாதம் சராசரியாக ரூபாய் 5,000/– வரை இலாபம் கிடைக்கும். கழுகுமலையில் கடை ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கும் விற்பனை செய்து வருகிறேன்.

என்னைப் போன்ற ஏழைகளுக்கு ரூபாய் 8,000/– முதலீடு என்பது எட்டாத கனியாகத்தான் இருக்கிறது. ஆனால் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலினால் இன்று என் குடும்பம் ஓரளவு மகிழ்ச்சியாக இருக்கிறது” என்கிறார்.

தற்போது பர்வதம்மாள் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக உள்ளார். அவருக்கென்று ஒரு மரியாதை உள்ளது. இதற்கெல்லாம் காரணம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்புச் சங்க பொறுப்பாளர்கள் தான் என்று மனதாரப் பாராட்டுகிறார். ■

அமுதசுரபியின் உதவியால் அற்புதமான தொழில்

தூத்துக்குடி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிலுக்கு பெயர் பெற்ற கோவில்பட்டி நகரின் அருகில் அமைந்துள்ளது கூழைத்தேவன்பட்டி என்ற கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்த காளியம்மாள் தீப்பெட்டி ஒட்டுவதில் தேர்ச்சி பெற்றவர். இவர் கூறுகிறார் “நான் 30 ஆண்டுகளாக தீப்பெட்டி ஒட்டும் தொழில் செய்து வருகிறேன். ஜோதி கம்பெனியில் இருந்து இயந்திரம், பெட்டிக்கான அட்டை, பசை எல்லாம் தந்துருவாங்க. மிசினை வைத்து ஒட்டிக் கொடுக்கணும். 144 பெட்டி ஒட்டுனா 40 பைசா தருவாங்க. சொந்தமாக இயந்திரம் வாங்கி தொழில் செய்தால் கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்ற எனது நீண்ட நாள் தாகத்தைத் தீர்த்து வைத்தது கூட்டமைப்பின் அமுதசுரபி கடன்.

நான் இலக்கு மக்கள் பட்டியலில் உள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் ரூபாய் 15,000/– கடன் தந்தார்கள். குழுக்கடன் மற்றும் சொந்தப் பணம் என ரூபாய் 25,000/– போட்டு பழைய இயந்திரம் ஒன்றை வாங்கினேன். ஏற்கனவே இருந்த ஒரு ஓலைக்குடிசையில் இயந்திரம் வைத்து தொழில் செய்ய ஆரம்பித்தேன். 144 பெட்டிகள் கொண்டது ஒரு குரோஸ். இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 250 குரோஸ் வரை தீப்பெட்டிகள் ஒட்ட முடியும்.

பெட்டி, பசை எல்லாம் கம்பெனியில் இருந்து நேரடியாகத் தந்து விடுவார்கள். சொந்தமாக இந்திரம் வைத்திருப்பதால் ஒரு குரோஸ் பெட்டி ஒட்டினால் ஒரு ரூபாய் தருவார்கள். அதனால் எனக்கு மாதந் தோறும் சராசரியாக ரூபாய் 6,000/– வரை வருமானம் கிடைக்கிறது. இயந்திரத்திற்கு ஆயில் ஊற்றுதல், பழுது பார்த்தல், மின் கட்டணம் என மாதம் ரூ. 600/– வரை செலவு ஏற்படும். அனைத்து செலவுகளும் போக மாத வருமானமாக ரூ. 5,000/– வரை கிடைக்கிறது. தற்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது”என்கிறார்

தூத்துக்குடி மாவட்டச் சிறப்பு

நிரந்தர வருமானம் தரும்

ஆயத்த ஆடை தொழில்

பயிற்சியை முடித்த பின்னர் கார்மெண்ட்ஸ் நிறுவனம் ஆடைகளைத் தேவையான அளவு வெட்டி தருவதை பெற்று நாங்கள் சரியாக தைத்துக் கொடுக்கிறோம். பிராக், சுடிதார், மிடி என்று பல்வேறு வகையான ஆடைகளைத் தைத்துக் கொள்கிறோம்.

நிரந்தர வேலை வாய்ப்பு இல்லாமலும், மாற்று தொழிலில் இல்லாமலும் வறுமைக்குள் வாழும் குடும்பங்களுக்கு தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம் நிரந்தர வருமானத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை நிரூபித்துக் காட்டியுள்ளது வாழ்ந்து காட்டுவோம் திட்டமும் கிராம வறுமை ஒழிப்புத் திட்டமும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தால் வறுமை நீங்கி வளம் பெற்றவர்கள் கூறுவதை சற்று கேட்போமா? "தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டி மற்றும் எட்டு நாயக்கன்பட்டி கிராமங்களில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நாங்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம். எங்கள் குடும்பம் இலக்கு மக்கள் பட்டியலில் உள்ளதால் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தொழிற்பயிற்சிகள் தருவதாதகவும், அதன் மூலம் வருமானம் ஈட்ட முடியும் என்றும் நம்பிக்கை ஊட்டினார்கள்.

எங்கள் குடும்பம் இலக்கு மக்கள் பட்டியலில் உள்ளதால் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தொழிற்பயிற்சிகள் தருவதாதகவும், அதன் மூலம் வருமானம் ஈட்ட முடியும் என்றும் நம்பிக்கை ஊட்டினார்கள்.

ஆர்வமாக இருந்த நாங்கள் 10 பேரும் இணைந்து தையல் பயிற்சி பெற முடிவு செய்தோம். ஆயத்த ஆடைக்கு பெயர்பெற்ற புதியம்புத்தூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தங்கம் கார்மெண்ட்ஸ் நிறுவனத்தில் இரண்டு மாதம் பயிற்சி பெற்றோம்.

பயிற்சிக்கான கட்டடத்தை காமநாயக்கன்பட்டியில் வாடகைக்கு பெற்றோம். பயிற்சிக்காக 6 தையல் இயந்திரங்களை கார்மெண்ட்ஸ் நிறுவனமும்,

பயிற்சிக் கட்டணமான ரூபாய் 16,000/–த்தை வறுமை ஒழிப்புச் சங்கமும் அளித்தது.

பயிற்சியை முடித்த பின்னர் கார்மெண்ட்ஸ் நிறுவனம் ஆடைகளைத் தேவையான அளவு வெட்டி தருவதை பெற்று நாங்கள் சரியாக தைத்துக் கொடுக்கிறோம். பிராக், சுடிதார், மிடி என்று பல்வேறு வகையான ஆடைகளைத் தைத்துக் கொள்கிறோம்.

ஒரு பிராக் தைத்துக் கொடுத்தால் ரூபாய் 30/–ம், ஒரு சுடிதார் தைத்துக் கொடுத்தால் ரூபாய் 40/–ம், மிடி தைத்துக் கொடுத்தால் ரூபாய் 30/–ம் கிடைக்கிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக இரண்டு உடுப்புகள் தைப்பதால் ரூபாய் 60/– வரை வருவாய் கிடைக்கிறது. மாதத்திற்கு 25 நாட்கள் தொடர்ந்து வேலை இருக்கும். எங்களால் தைத்துக் கொடுக்க முடியாத அளவுக்குத் துணி உள்ளது. உள்ளூரில் மாதம் ரூபாய் 3,500/– வரை சம்பாதிக்கிறோம். இதுவரை 17 மாதங்களில் நாங்கள் ஒவ்வொருவரும் தலா ரூபாய் 51,000/– வரை வருமானம் ஈட்டியுள்ளோம் என்பதை சொல்வதற்குப் பெருமையாக உள்ளது. எங்களுக்கு வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் என்றும் நன்றியுடன் இருப்போம்” என்கிறார்கள் வெற்றி பெற்றவர்கள். ■

17 மாதங்களில் நாங்கள் ஒவ்வொருவரும் தலா ரூ. 51,000/– வரை வருமானம் ஈட்டியுள்ளோம் என்று சொல்வதற்குப் பெருமையாக உள்ளது. எங்களுக்கு வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு என்றும் நன்றியுடன் இருப்போம்” என்கிறார்கள் வெற்றி பெற்றவர்கள்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரம் ஊராட்சியில் அடையாளம் தெரியாத என்னை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தியது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் மாதவன். “நான் ஒரு மாற்றுத் திறனாளி, எனக்கு வயது 30 ஆகிறது. சிறு வயதிலேயே போட்டே பிரேம் போடும் தொழிலைக் கற்றுக் கொண்டாலும், மாற்றுத் திறனாளி என்ற தாழ்வு மனப்பான்மையில் என்றால் மற்ற கடைகளுக்கு வேலைக்கு செல்ல கூச்சமாக இருந்தது. வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த எனக்கு, நம்பிக்கை ஊட்டி வெளி உலகிற்குக் கொண்டு வந்தது வறுமை ஒழிப்புச் சங்கம். போட்டோ பிரேம் போடும் தொழில் தெரிந்த நீ ஏன் ஒரு கடையை நடத்தக் கூடாது? என்று கேட்ட கேள்வி, எனக்குள் பற்றிக் கொண்டது.

ரூபாய் 5,000/– இருந்தால் போதும் ஒரு சிறிய கடை நடத்தலாம் என வறுமை ஒழிப்புச் சங்கத்திடம் கேட்டேன். அவர்களும் இதைத்தான் எதிர்பார்த்தது போல் உடனே ரூபாய் 5,000/–த்தை எனக்கு கடனாகக் கொடுத்தார்கள். நல்லவர்களின் ஆசியுடன் கடை தொடங்கி தினமும் ரூபாய் 150/– வரை வருவாய் பெற்று வந்தேன். மேலும் கடையை விரிவுபடுத்த, நான் உறுப்பினராக இருக்கும் சுடர் ஒளி குழு மூலம் கூட்டமைப்பில் ரூபாய் 10,000/– கடன் பெற்று விரிவுபடுத்தினேன்.

இன்று அனைத்து வகையான படங்கள் மற்றும் முகம் பார்க்கும் கண்ணாடி ஆகியவற்றிற்கு பிரேம் போடும் பணியை செய்து வருகிறேன். இதன் மூலம் சராசரியாக மாதம் ரூபாய் 6,000/– முதல் ரூபாய் 7,000/– வரை சம்பாதிக்கிறேன். வாங்கிய இரண்டு கடன்களுக்கும் மாதம் ரூபாய் 700/– வீதம் தவணை செலுத்தி வருகிறேன்.

என்னை நம்பி இருந்த என் குடும்பம் இன்று நல்ல முறையில் இருக்கிறது. மாற்றுத் திறனாளிகள் என்று என்னை ஏளனமாகப் பார்த்த எங்கள் ஊர் இன்று என்னை திரும்பி ஆச்சரியத்தில் பார்க்கிறது. இது எனக்கு கிடைத்த பெருமை மட்டும் அல்ல என் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஏற்படுத்திய நம்பிக்கை என்கிறார் மாதவன். ■

தூத்துக்குடி மாவட்டச் சிறப்பு

தனி நபர் கடனில்

ஒரு குடிசைத் தொழில்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் கடன் பெற்று தொழில் செய்ய முடிவு செய்து கடன் கேட்டபொழுது, வறுமை ஒழிப்புச் சங்கம் முழு மனதுடன் ரூபாய் 13,500/– கடன் கொடுத்து உதவியது.

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபுரம் ஊராட்சியில் வாழ்ந்து வருகின்றனர் முருகன் – காளியம்மாள் தம்பதியினர். ஒரு தீப்பெட்டிக் கம்பெனியில் முருகன் ரூபாய் 1500/–ம், காளியம்மாள் ரூபாய் 750/–ம் மாத ஊதியமாகப் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். குறைந்த கூலி என்றாலும் சிறிய குடும்பம் என்பதால் ஓரளவு போதுமானதாக இருந்தது. தங்களுக்கு ஆசையாய் பிறந்த மகன் பாண்டியராஜன் நடக்க முடியாமல் இருந்ததால் அவனைப் பாதுகாப்பதில் முழு கவனம் செலுத்தினார். இதனால் சரிவர வேலைக்கு செல்ல முடியவில்லை. வருமானம் குறைந்தது. மருத்துவச் செலவு கூடியதால் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தது முருகன் – காளியம்மாள் குடும்பம்.

திக்குத் தெரியாமல் திகைத்து நின்ற காளியம்மாளுக்கு வழிகாட்டியது வாழ்ந்து காட்டுவோம் திட்டம். திருமணத்திற்கு முன் சோப்பு பவுடர் தயாரிக்கும் கம்பெனியில் வேலை செய்ததால் சோப்பு பவுடர், கிளீனிங் பவுடர் தயாரிப்பதில் காளியம்மாளுக்கு முன் அனுபவம் இருந்தது.

தற்பொழுது சர்ப் பொடி, பாத்திரப் பொடி ஆகியவற்றை தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை மதுரையில் இருந்து மொத்தமாக வாங்கி வந்து, 1/2 கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகளில் அடைத்து பக்கத்து கிராமங்களில் விற்பனை செய்து வருகிறார். இதன் மூலம் தினமும் ரூபாய் 150/– முதல் ரூபாய் 200/– வரை வருமானம் கிடைக்கிறது. மாதம் சராசரியாக ரூபாய் 3000/– வரை வருவாய் ஈட்ட முடிகிறது. வாரம் நான்கு நாட்கள் வியாபாரத்திற்கு சென்றால் போதும் குழந்தைகளையும் பராமரிக்க முடிகிறது. மருத்துவ செலவுகளையும் சமாளிக்க முடிகிறது. தற்பொழுது ஓரளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று கூறுகிறார் காளியம்மாள். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (54,600 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD, New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

...

உலக எய்ட்ஸ் தினம்
டிசம்பர் - 1
2010
பெற்றால்தான்
பிள்ளையா..?
எச்.ஐ.வி.யுடன்
வாழும் / ஆதரவிழந்த
குழந்தைகளுக்கு
தரமான வாழ்க்கை
அமைய
கைகொடுங்கள்
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
எய்ட்ஸ்
விழிப்புடன் இருப்போம்
வரும்முன் காப்போம்
சென்னை-8
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
psi
ஹலோ 106.4 fm
தொடர்பு கொள்ளுங்கள் 9698080333 / visit: www.tansacs.in

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2435/2010
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11

ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித் துறை

உலக கழிவறை தினத்தினை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் பல்வேறு ஊராட்சிகளைச் சேர்ந்த 2212 பயனாளிகளுக்கு ரூபாய் 2200/- வீதம் ரூபாய் 48,66,400/-க்கான மானியத் தொகையினை கூடுதல் ஆட்சியர் திரு. ஹனீஷ் சாப்ரா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உடன் உதவித் திட்ட அலுவலர் திரு. ரோஹினி, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. க. அனந்தகிருஷ்ணன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.